DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | **C.C.No. 396 /2024** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution<br>Defence |

| | | |
|---|---|---|
| Name | : | சூரியன் (Pw.1 ) |
| Father/Husband Name | : | சுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day June of 2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஆவியூரில் குடியிருந்து வருகிறேன். நான் கம்பி கட்டும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.12.2020 ம் தேதி இரவு நேரத்தில் தோட்டத்திற்கு செல்லுவது வழக்கம். அதுபோலவே அன்றும் இரவு 10.30 மணியளவில் வீட்டை பூட்டிவிட்டு வீட்டின் சாவியை எப்போதும் போல் மீட்டர் பாக்ஸ் மீது வைத்துவிட்டு தோட்டத்திற்கு சென்றுவிட்டோம். மறுநாள் 03.12.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் வீட்டிற்கு வந்து சாவியை பார்க்கும் போது சாவி அந்த இடத்தில் இல்லை. சாவியை தேடி கதவை தொட்டு பார்த்த போது கதவு திறந்து இருந்தது. வீட்டின் மற்ற கதவுகளும், பூஜை அறை கதவும் திறந்திருந்தது. நான் உள்ளே சென்று திறந்திருந்த பீரோவை பார்த்த போது நான் வைத்திருந்த நகைகளை தேடினேன், 40 கிராம் எடையுள்ள தங்க

கயின், 50 எடையுள்ள தங்க கயின், 34 கிராம் எடையுள்ள இரண்டு தங்க வளையல் ஆகிய நகைகளை காணவில்லை. அவற்றின் மதிப்பு ரூ.5,80,000/- ஆகும். நான் வீடு முழுவதும் தேடி பார்த்தேன் நகைகள் கிடைக்கவில்லை. பக்கத்து வீட்டு நபர்கள் விபரம் கேட்டார்கள். பின்னர் பிள்ளைகளுடன் பேசிவிட்டு மாலை சுமார் 6.00 மணியளவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(சான்று பொருளை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறொரு நாளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**